# விடியல்

The Dawn

இதழ்-119, மார்ச் - 2019



**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**

கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

**முனைவர் சி.ரா.சுரேஷ்**

தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

**முனைவர் ப.பிரதீபா**

தமிழ் உதவிப்பேராசிரியர்

**ஆசிரியர் குழு**

திருமதி. சு.சாந்தி
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
முனைவர் ந.சங்கீதா
திரு. செ.தங்கராஜ்
முனைவர் சு.முப்பிடாதி
திரு. ந.சரவணன்
திரு ஆ.கௌரிசங்கர்
திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
திரு. ரா.தர்மதுரை
செல்வி. மா.சத்தியப்பிரியா
திருமதி கொ.சத்தியா
திருமதி கா.வெண்ணிலா
முனைவர் ம.சுரேஷ்
திரு க.தனபால்
திருமதி ல.வெண்ணிலா
திரு.வீ.சங்கிரான்


## உலக மகளிர் தினம்

**மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல**
**மாதவம் செய்திடல் வேண்டுமம்மா...**

என்பது கவிமணியின் வாக்கு. பெண்கள் வீட்டின் கண்களாகப் போற்றப்பட வேண்டியவர்கள். ஆண், பெண் சேர்ந்ததே உலகம். ஆண், பெண் சமநிலையால் மட்டுமே சமூகமும் அதனால் நாடும் உயர்நிலையடையும். 19 - ஆம் நூற்றாண்டு முதல் தற்போது வரை நடக்கும் பெண்கள், பெண்ணியம் சார்ந்த போராட்டங்கள் பல. இப்போராட்டங்களுக்கு எதிராக நடந்த அடக்குமுறைகள் பல. எனினும் பெண்ணியம் குறித்த புரிதல், விழிப்புணர்ச்சி சமூகத்தில் ஏற்பட்டுள்ளதா என்பது ஐயமே.


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)



வெளியீடு:

**தமிழ்த்துறை**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)**
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

KSR COLLEGE OF ARTS AND SCIENCE
I N D I A
Knowledge is Power



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publis

பெண்ணியம் என்பது பெண்களுக்கு மட்டுமே எல்லா உரிமைகளும் வேண்டும் என்பதல்ல. ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம அளவில் பொதுவான சமத்துவம் வேண்டும் என்பதே பெண்ணியம். இந்தப் புரிதல் ஆண்களிடத்தில் மட்டுமல்லாது பெண்களிடத்தும் இல்லை என்பது வருத்தத்திற்குரியது. பெண்கள் வெறும் போகப் பொருள் அல்ல. ஆனால் இன்றைய சூழலில், குறிப்பாக விளம்பரங்களாலேயே நிறைந்திருக்கும் இவ்வுலகில் பெண்கள் போகப் பொருளே என வலியுறுத்துவதாக அமைகிறது. பெண் என்பவள் அடுத்தவர்களின் கவனத்தை ஈர்க்கும் காந்தப் பொருள் போன்றே இன்றைய விளம்பரங்களும், திரைப்படங்களும், ஊடகங்களும் நம்மிடம் திணிப்பதை நுண்ணியதாக கவனிப்பதன் வாயிலாக அறியலாம். மீண்டும் மீண்டும் இக்கருத்தினை காட்சிகளின் வாயிலாக நம் மனதிற்குள் புகுத்துவதை நாம் அறிவதில்லை.

ஆண், பெண் சமத்துவ நிலையை நம் சமூகம் இன்னும் அடையவில்லை என்பதற்கு திருப்பூர் வன்கொடுமையே சாட்சி. தினம் தினம் வெளியாகும் பெண்கள், பெண் குழந்தைகள் மீதான வன்கொடுமை தாக்குதல் செய்திகள் மேற்கூறிய கருத்தாக்கத்தை மேலும் வலுப்படுத்துகிறது. இன்றைய சமூகம் பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் உள்ள வேறுபாட்டைக் கூட அறிய இயலாத மனப் பிறழ்வு நிலையில் உள்ளது என்பது அனைவருக்கும் அச்சம் தரக்கூடியதாகும். ஆஸி∴பா, தனலட்சுமி, ரிதன்யா மற்றும் இன்னும் பெயர் தெரியா பெண் மழலைகள் எண்ணற்றோர். இந்நிலை களையப்படல் வேண்டும்.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

- என்பது வள்ளுவர் வாக்கு. வள்ளுவர் கூறிய நோய்க்கான காரணத்தைக் கண்டறிதல் இன்றியமையாமை போல பெண்களுக்கு எதிராக நடக்கும் அடக்கு முறைகளுக்கான மூல காரணத்தைக் கண்டறிந்து, அதனைக் களைய முயற்சிகள் எடுக்கப்படல் வேண்டும்.

பெண் என்பவள் தான் அடையப்படக் கூடியவள் எனும் கருத்து நம் சமூகத்தில் வேரூன்றியுள்ளது. இக்கருத்து நீங்க நம்மிடையே உளவியல் அடிப்படையிலான விழிப்புணர்வும் அவசியமாகிறது. எதிரெதிர் பாலினங்களே தவிர, ஆணாயினும், பெண்ணாயினும் உடல், மன பேதங்களை ஒழித்து சமநிலை எய்த அனைவரும் ஒன்றுபட்டு செயல்படல் அவசியம். இந்தியாவில் நடுநிசியில் கழுத்தில் நகைகளுடன் ஒரு பெண் எவ்வித ஆபத்துமின்றி செல்ல வேண்டும் எனும் மகாத்மா காந்தியின் கனவினை நனவாக்க முயல்வோம்... முடியவில்லையெனில் குறைந்தபட்சம் ஒரு பெண்ணுக்கு எவ்வித இடர்பாட்டையும் வழங்காமல் இருக்க முயற்சி செய்வோம்.

**- இணையாசிரியர்**

உலக மகளிர் தினம்


கவிதைகள்.......................5 – 22

தஞ்சை பெரிய கோயில்

வரலாறு ...........................23 –24

விவசாயி.........................24 -27

விடுகதை.........................27 -28

பொது அறிவு வினா- விடை......28 -31

கவிதைகள்.......................31 -32

# கவிதைகள்

## மகள்

ஆண்டுகள் பல
அருமையாய் தவமிருந்து,
ஆலயங்கள் பல சென்று,
ஆண்டவனை வேண்டி,
ஆவலோடு காத்திருந்து,
ஆறாம் ஆண்டு,
ஆண்டவன் கொடுத்த லட்சுமியே...
தேவதையே,
என் அன்பு மகளே!
உன் வார்த்தையெல்லாம்,
வேத வாக்குதான்...
பேச்செல்லாம் கவிதைகள் தான்,
நீதானம்மா வாழ்க்கை,
நீதானம்மா என் குலதெய்வம்
உன்னைக் கேளாமல், ஒரு செயல்
நடந்ததில்லை
ஊர் முழுதும்
உன் பேச்சு பேசாதோரில்லை
பெண்ணாகப் பிறந்துவிட்டால்
பிரிவென்று உண்டன்றோ,
நதியும் நங்கையும்
பிறந்த வீட்டில் தங்கிடலாமோ

பாய்ந்தாலேதான் நதிக்கு அழகு,
கணவன் வீட்டில் வாழ்ந்தால் தானே
பெண்ணுக்கு என்றும் பேரழகு,
வழியனுப்பும் நாளன்று
வார்த்தைகள் வரவில்லை
வழியும் கண்ணீரை
நிறுத்தவும் வழியில்லை
துடைக்கும் உன் கைகளைக்,
காண சக்தியில்லை
நீ மறுவீடு சென்றபின்
இவ்வீட்டில் ஒளியில்லை...
என் அன்பு மகளே!

கே.ஆர்.தனசேகர்
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## தாய்

என்னைப் பெற்றெடுத்த தேவதையே
உன் அனபுக்கு இந்த உலகில்
வேறெதும் ஒப்பிட முடியாது
எனைப் பத்து மாதங்கள்
உன் வயிற்றில் சுமந்து
இந்த உலகிட்கு
அறிமுகம் செய்தாய் தாயே !
உன் பாசம் என்னும் கடலில்
மகிழ்ச்சியோடு மிதந்து
கொண்டிருக்கிறேன்...

உன் அன்புக் கரங்களில்
என்னை மிதக்க வைத்து
மகிழ்ச்சி எனும் வானில்
நீ உலா வந்தாய்...
அழகிய நிலவே!
நீ என் மூன்றெழுத்து
பொக்கிஷம் “அம்மா”!

ச.ஜனனி
இளங்கலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு

## கல்லூரிக் காலம்

மறக்க நினைத்தும்
மண்ணில் பட்ட ஈரம்
மலர்கள் வாடிய
போதும்
வண்ணம் மாறாது
எங்கும் மணம் வீசும்!!
இறக்கும் நொடியிலும்
கண்ணீல் நீர் வடியும்
என் கல்லூரிக் காலத்து நினைவிற்காக!!
உதவி என்று கேட்காமலேயே
உதவிய உள்ளங்கள்
கிடைத்த காலம்
காலம் மூன்று ஆண்டாயினும்
என் உள்ளத்தில்
உறைந்து நிற்பது

என் கல்லூரிக் காலமே!!
வேண்டும் என்று கேட்ட பொழுது
நல்ல குணத்தையும்
வேண்டாம் என்று நினைக்கும் பொழுது
ஏற்ற பாதையையும்
காட்டிய இனிய நற்காலம்!!
நாங்கள் செய்த
சேட்டைகளையும்
சண்டைகளையும்
சேர்த்து வைத்துள்ள
பொற்காலம்!
ஞானம் கொடுத்தது மட்டுமின்றி
நன்மை தீமையைப்
பிரித்து உணரும்
திறன் கொடுத்த
புண்ணிய காலம்!!
பெற்றவரை மறந்து
உறவுகளைப் பிரிந்திருக்கும்
வலியில்லாமல்
நட்பு என்னும்
சொர்க்கத்தைத் திறந்த
தங்க சாவி!!
வர்ணிக்க வார்த்தையில்லை
பெருமைப் படுத்த விருதுகள் இல்லை
சரித்திரம் படைக்க அறிஞரில்லை
சாத்திரம் பேசும் பெரியாரில்லை
அறிமுகப் படுத்த ஆராய்ச்சியில்லை

என் கல்லூரிக் காலத்து
நினைவிற்கு முன்!!

ச.பிரியா
முதலாமாண்டு இளங்கலை - கணிதவியல்

## பெண்கள் தின வாழ்த்துக்கள்

நூறு கோடி விண்மீன்கள்
ஒளிர்கின்றன விண்ணில் அல்ல
இம்மண்ணில் பெண்களாய் !!!
ஒளிர்கின்ற விண்மீன்களை
வானம் காப்பது போல்
இவ்வுலகில் இருக்கும் ஆண்கள்
பெண்களைக் காப்பாற்றுகின்றனர்...
பூவினும் மென்மையானவர் பெண்கள்!
அப்பூவினைக் காப்பாற்றா விட்டாலும்
பரவாயில்லை
காயப்படுத்தாமல் இருந்தால் போதும்
இனிய பெண்கள் தின வாழ்த்துக்கள்,

ம.சந்திரமதி
இரண்டாமாண்டு இளங்கலைத் தமிழ்

## கல்லூரிக் காலங்கள்

வாழ்க்கையில் எந்த ஒரு
எதிர்ப்பார்ப்பும் இல்லாது
கிடைத்த ஒரே உறவு...
பள்ளியில் தோன்றிய அந்த

அழகிய நாட்கள்
இன்று கல்லூரியில்
தேடினாலும் கிடைக்காது
என்ற ஏக்கம் ..
பள்ளி நட்போ சில
காலங்கள் மட்டுமே
என் வாழ்க்கையில்..
சோகங்கள் வரும் பொழுதெல்லாம்
தட்டிக் கொடுக்கும் கல்லூரி நட்புகள்
இப்பொழுது
என் வருத்தமெல்லாம்
இதுவும் எத்தனைக் காலங்கள்
தொடருமோ என்று தான்.

சு.புஷ்பா
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

## எல்லாம் ஒன்றுதான்

எல்லாம் ஒன்றுதான்
இரண்டு கண்கள் இருந்தாலும்
காட்சி ஒன்றுதான்
இரண்டு காதுகள் இருந்தாலும்
கேள்வி ஒன்றுதான்
அறுசுவை ஆனாலும்
ருசிப்பது நாக்கு ஒன்றுதான்
ஏழு ஸ்வரம் ஆனாலும்
வீணை ஒன்றுதான்

வானவில் ஏழு ஆனாலும்
வானம் ஒன்றுதான்
கோயில்கள் பலவானாலும்
தெய்வம் ஒன்றுதான்
தானியம் ஒன்பது என்றாலும்
விளையும் பூமி ஒன்று தான்
கோள்கள் ஒன்பது ஆனாலும்
சூரியன் ஒன்றுதான்
நோய்கள் பலவானாலும் டாக்டர் ஒன்றுதான்
சேய்கள் பலவானாலும் தாய் ஒன்றுதான்
மாணவர்கள் பலரானாலும்
ஆசிரியர் ஒருவர்தான்

ச.அபிராமி
இளங்கலைத்தமிழ் முதலாமாண்டு

## தந்தை

பாமரனாய் நிலத்தினை
உழவு செய்த போதிலும்
கூலிக்காரனாய் தோளில்
மூட்டை சுமந்த போதிலும்
தன் பிள்ளையின் விரலில்
சூரியன் சுடக் கூடாதென
கைப்பிடித்து ரசித்து
பள்ளிக்குக் கூட்டிச் சென்று
தான் காணாத
முதலெழுத்தை உயிர் எழுத்தாய்

கொடுக்கிறான்
உடலின் வியர்வையைக் கூட துடைக்காமல்
பிள்ளையின் புன்னகைக்கு
முதல் ரசிகனாகும்
ஒவ்வொரு தந்தையும்
அன்பின் நிலவு போன்றவர்கள்

கா.யோ.வர்ஷா
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## நட்பு

கடலின் ஆழம்
நீரில் தெரியும்
நிழலின் அருமை
வெயிலில் தெரியும்
ஆனால்
நட்பின் அருமை
உணர்ந்தால்தான் தெரியும்
நெல்லுக்கு உமி சொந்தம்
வயலுக்குப் பயிர் சொந்தம்
உடலுக்கு உயிர் சொந்தம்
அடிபட்ட மனதிற்கு
நட்புதான் சொந்தம்
தாயின் அருமை
துன்பத்தில் தெரியும்
ஆனால்
நண்பனின் பாசம்

பிரிவில் தெரியும்
வானத்திலுள்ள எது அழிந்தாலும்
என் உடலிலுள்ள உயிரே அழிந்தாலும்
நம் நட்பு அழியாது.

வே.தீபிகா

இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## நட்பு

நான் கடற்கரைக்குச் சென்று
நம் நட்பை எழுதினேன்,
அப்போது
அலைகள் வந்து
அழித்துச் செல்லவில்லை...
படித்துச் சென்றது...
நம்மை வளர்ப்பது நம் தாய்
அதற்கு உதவி புரிவது நம் தந்தை
நாம் படிக்க உதவுவது ஆசிரியர் - ஆனால்
நம்மை சந்தோஷப்படுத்துவது
நம் நண்பர்கள் ...!

பாலதர்ணியா

இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## நட்பு

காலத்தில் வசந்தம்
பசுமையின் அழகு

காலையில் புல்வெளி
பனித்துளி அழகு
மாலையில் முழுமதி
மயக்கிடும் அழகு
மழைமேக எதிர் ஒளி
வானவில் அழகு
வெண்பனி இமயம்
வெயிலினில் அழகு
வெண்குழல் நயாகரா
சிந்திடும் நீர்த்துளி அழகு
பச்சிளம் குழந்தையின்
புன்னகை அழகு
கடல்வெளி பரப்பின்
அலைகள் அழகு
கன்னித் தமிழுக்கு
கவிதையே அழகு

ச.ஜனனி
இளங்கலைத்தமிழ் முதலாமாண்டு

## கல்லூரிக் காலங்கள்

என் வாழ்வில்
பல நாட்கள் சிறப்பானவை
ஆனால் கல்லூரியில்,
அனைத்து நாட்களும் சிறப்பானவை
முதலில்
அன்னை வயிற்றில் கருவாய்

இருந்தது பத்து மாதமே
இரண்டாவது
கல்லூரி என்னும் தாயின்
வகுப்பில் பல மாதங்கள்
துன்பம் வரும் காலங்களில்
சிரிக்க வைக்க நண்பனும்
சிரித்து மகிழ்ந்திடும் காலங்களில்
அறிவை வளர்க்க
உயர்ந்த ஆசிரியரும்
என் தரத்தினை உயர்த்திய
அருமையான பொற்காலம்
கல்லூரி வாழ்கையே!

ப.விஜயசித்ரா
இளங்கலை தமிழ் முதலாமாண்டு

## கல்லூரி காலங்கள்

காலத்தால்
அழியாத காலம்
கல்லூரிக் காலம்..!!
கல்லாய் இருக்கும் மனசு
உருகித் துடிக்கும் காலம்
கல்லூரிக் காலம்…!!
இங்கே
மகளிர் சிறகடித்து
பறக்கும் பட்டாம்பூச்சிகள்!!
ஆடவர் கனவுகளோடு

வாழும் காளையர்
ஆசான்கள் அழகான
சிற்பங்களைச் செதுக்கும்
சிற்பிகள்
தாவணியுடன் பறக்கும்
வண்ணத்துப் பூச்சிகள்
சுடிதாருடன் சுழன்று
வரும் சிட்டுக் குருவிகள்
சிரிப்புகள் நடமாடும்
பூந்தோட்டம் கல்லூரி
வளாகம்
அவனை
அவள் முறைத்துப்
பார்க்கும் கண்களும்
அவளை
அவன் கருணையோடு
பார்க்கும் கண்களும்
கண்கள் எரிகணையாய்
களம் பூந்து விளையாடும்
களம் கல்லூரி வளாகம்!!!
அவன்
ஜாதி எனக்குத் தெரியாது
என் ஜாதி
அவனுக்குத் தெரியாது
எங்கள் ஜாதி ஒரே ஜாதி
கல்லூரி நட்பு ஜாதி!!!

ஒரு குவளை சோற்றை
ஓராயிரம் கைகள் பிசையும்
ஒரு சோடி உடுப்பை
ஓராயிரம் உடல்கள் போடும்
ஒரு கட்டி சோப்பை
ஓராயிரம் முகங்கள் தேய்க்கும்
உலக சமத்துவம் நிலவும்
ஒரே இடம்
கல்லூரி வளாகம்
சோகத்தில் சோர்ந்திருந்தேன்
தோளோடு
இன்னுமொரு தோள்
என் தோழியின் தோள்
ஏனடா கலங்குகிறாய்
தோழி நான் இருக்கையில்
என்றாள்!!
இன்று
சோர்ந்திருக்கிறேன்
தோள் தட்டி தர ஒரு
தோழமை இல்லாமல்...
சோகங்களே தெரியாமல்
வாழும் காலம்
கல்லூரி வசந்த காலம்
எனக்கு இருந்த
முன்கோபத்தைக்
காணவில்லை

நானே அனுபவிக்கனும்
என்ற பேராசையைக்
காணவில்லை
கற்றுத் தந்தது
கல்லூரிக் காலம்
பெற்றுவிட்டேன்
வாழ்க்கை அனுபவம்
சிறப்பாக வாழ்கிறேன்
இன்னும்
கல்லூரிக் காலத்துடன்!!

மு.ஆஸி.ஃ.பா நவுரின்
இரண்டாமாண்டு இளங்கலைத்தமிழ்

## கல்லூரிக் காலங்கள்

கண்களும் குளமாகுமே
கல்லூரி நாட்களை நினைக்கையிலே...
கனவுகள் நிறைவேறியதோ இல்லையோ
கற்பனைகளுக்கு எல்லை என்று
ஒன்றும் இல்லை
வானமும் எட்டி விடும்
தூரம் தான் என்று
வாழ்க்கையும் எல்லையை
முட்டிப் பார்க்க முற்பட்டது..
முதல் பயிற்சி
முழுப் முயற்சி
முதல் காதல்

முடிவில் மோதல்
பல பிரிவுகள்
அதிலும் கட்டாயங்கள்
அனுபவங்களின் முடிவு
நண்பனின் பிரிவு
சோர்விலும் உற்சாகம் - ஆனால்
உற்சாகத்தில் துளி இல்லை
சோர்வும்..
வகுப்பறையில் தூக்கம்
விடுதி அறையில் பாடம்
ஐந்து மாதமும் கொண்டாட்டம்
ஐந்து நாட்களில்
முழு பாடமும் மனப்பாடம்
தேர்வும் தேர்தலும் ஒன்றுதான்
ஆனால் முடிவில்
தேர்ச்சியும் தோல்வியும்
சமம்தான் எங்களுக்கு…
முதல் மேஜையினருக்கு
வாழ்க்கைப் பாடமும் அத்துப்படி
இன்றோ
அனைவரும் அவரவர் துறையில்
ஓய்வில்லாத உழைப்பு
ஆனால்
முடிவில் களைப்பு
குடும்பத்திற்கே செலவிட நேரமில்லையாம்
குருவி போல் சேர்த்தாலும்

கையில் பணம் இல்லையாம்
சமூக வலைத்தளங்களில்
பற்பல பதிவேற்றங்கள்
அதிலும் சில முன்னேற்றங்கள்
இருப்பினும்
ஏதோ ஒன்றை
பிரிந்து விட்ட உணர்வு
மீண்டும் ஒரு முறை கிடைக்குமோ
மீள முடியா நினைவுகளில்
வாழ்ந்த நாட்கள்!!!

மோ.மோனிஷா
இரண்டாமாண்டு இளங்கலைத் தமிழ்

## அன்பு

எல்லா சுயநலத்துக்குப் பின்னாடியும்
ஒரு துரோகம் இருக்கும்
எல்லா பொறாமைக்குப் பின்பும்
ஒரு ஒப்புமை இருக்கும்
எல்லா பந்தாக்குப் பின்னாடியும்
ஒரு ஏக்கம் இருக்கும்
எல்லா தாழ்வு மனப்பான்மைக்குப் பின்னாடியும்
ஒரு கேலி இருக்கும்
எல்லா தனிமைக்குப் பின்னாடியும்
ஒரு நிராகரிப்பு இருக்கும்
எல்லா கோபத்துக்குப் பின்னாடியும்
ஒரு எதிர்பார்ப்பு இருக்கும்

எல்லா வெறுப்புக்கு பின்னாடியும்
ஒரு அன்பு இருக்கும்

செ.கவிப்பிரியா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## தோழி

தோல்வி என்னைத் தொடும் முன்னே
தோழமையுடன் தோள் கொடுப்பாயடி....
கவலைகள் மனதை
காயப்படுத்தும் முன்னே
காயத்தை ஆற்றும்
மருந்தாக வருவாயடி....
ஒருநாள் பேசாவிட்டால்
ஒரு ஜென்மம் போனதடி – என
நீ துடிப்பதை நான்
நன்கு அறிவேனடி
நினைவினில் நிஜமானவளே – என்
கனவிலும் கரைந்தாயடி....
என் தோழி என்ற உரிமையுடனே
உன் தோலில் சாய்வேனடி
உன் சிநேகிதி என்ற உரிமையுடனே
உனை நான் அதிகாரம் செய்வேனடி
என் ஒற்றை விழியாக என்தோழி
நீ என்னில் என்றுமே வாழ்வாயடி.

சி.வினிதா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

# வலிகள்

காலங்கள் மாறினால்
வலிகள் அதிகம்...
சோகங்கள் ஆறட்டும்
பாவங்கள் சாகட்டும்....
புதிதாய் சில
மௌனங்கள் தரும்
மிதிக்கப்படும் உன்
சந்தோஷம் மறைய...
எத்தனை சண்டைகள்
இருக்கட்டும் ஒரு ஓரமாக...
வலிகள் அதிகம்
திட்டும் தருணங்களில்...
அன்பு உள்ளவர் மேல்
கோபம் வருவது அல்ல...
உரிமை உள்ளவர் மேலே
கோபம் தரும் வலிகள்...
வலிகள் உன்னாலே
மறைக்க முடியும் என்றால்....
உனக்குப் பிடித்தவரின்
சந்தோஷத்தில்....

மு.உமாராணி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

# தஞ்சைப் பெரிய கோயில் வரலாறு

இக்கோயில் கிபி. 11-ஆம் நுற்றாண்டில் முதலாம் இராஜராஜ சோழனால் கட்டப்பட்டது. 1003 - 1004 ஆம் ஆண்டு தொடங்கி 1010 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட இந்தக் கோயிலுக்கு 2010 ஆம் ஆண்டோடு 1000 ஆண்டுகள் நிறைவடைந்தன. இக்கோயில் தஞ்சைப் பிரகதீசுவரர் கோயில் என்றும் தஞ்சைப் பெரிய கோயில் அல்லது தஞ்சைப் பெருவுடையார் கோயில் என்றும் அழைக்கப்படுகிறது. சிவபெருமானை முதற்கடவுளாகக் கொண்டு இக்கோயில் அமைந்துள்ளது. இது உலகப் பாரம்பரியச் சின்னமாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் அமைந்துள்ள மிகப்பெரிய கோவில்களில் இதுவும் ஒன்றாகும்.

**கட்டமைப்பு**

கோயில் கல்வெட்டுகளில் தலைமைச் சிற்பி குஞ்சாரமல்லன் ராஜராஜராமப் பெருந்தச்சன் என்று கூறப்பட்டுள்ளது. கோயிலின் அடிப்பாகம் 5 மீட்டர் உயரம் கொண்டுள்ளது. ஒரே கல்லில் அமைக்கப்பட்டுள்ள நந்தி 20 டன் எடையும், இரண்டு மீட்டர் உயரம், ஆறு மீட்டர் நீளம், இரண்டரை மீட்டர் அகலமும் கொண்டதாகவும் உள்ளது. இந்தியாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய நந்தியாக இது உள்ளது. முதன்மைக் கடவுளான இலிங்கம் 3.7 மீட்டர் உயரமானது. வெளிப் பிரகாரம் 240மீ முதல் 125மீ அளவிலானது. 108 பரத நாட்டிய முத்திரைகளைக் காட்டும் நடனச் சிற்பங்கள் வெளிச்சுவற்றின் மேற்பகுதியில் வடிக்கப்பட்டுள்ளன. பிற்காலத்தில் பாண்டியர்களால் 13 - ஆம் நூற்றாண்டில் அம்மன் சன்னிதியும் விசய நகர அரசர்களால் சுப்பிரமணியர் சன்னிதியும்

கட்டப்பட்டு, மராத்திய அரசர்களால் விநாயகர் சன்னிதி புதுப்பிக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது.

**சிறப்புகள்**

இத்தகைய பிரமாண்டமான கோயில் சுமார் 7 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது. கருவரையில் உள்ள சிவ லிங்கம் உலகிலேயே மிகப் பெரிய சிவலிங்கமாகும். 6 அடி உயரம், 54 அடி சுற்றளவு கொண்ட ஆவுடையார், 23.5 அடி உயரம் கொண்ட லிங்கம் ஆகியன தனித்தனியாக கருங்கற்களால் செதுக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.

தஞ்சை பெரிய கோவிலுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் மத்திய அரசு சார்பாக கடந்த 1954-ம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதி 1000 ரூபாய் நோட்டை வெளியிட்டது. அதில் தஞ்சை பெரிய கோயில் எனப்படும் பிரகதீசுவரர் ஆலயத்தின் வியத்தகு தோற்றம் பதிக்கப்பட்டது. ரிசர்வ் வங்கியின் 4-வது கவர்னரான சர் பெனகல் ராமாராவ் அதில் கையெழுத்திட்டார். மத்திய அரசு 1995 ஆம் ஆண்டில் மாமன்னர் ராஜராஜ சோழன் உருவம் பதித்த 2 ரூபாய் தபால் தலையை வெளியிட்டது.

மோ.சோனியா
இளங்கலைத்தமிழ் மூன்றாமாண்டு.

## *சிறுகதை - விவசாயி*

மதுரைக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் மாணிக்கமும், அவரது மனைவி சிவகாமியும் மிக ஏழ்மையில் வாழ்ந்து வந்தனர். நீண்ட காலமாக இருவருக்கும் குழந்தைப்பேறு இல்லாமல் வருத்தத்துடன் வாழ்ந்து வந்தனர். அவர்கள் நிறைய கோயில்,

குளம் போன்ற புண்ணிய தலங்களுக்கு சென்றும் குழந்தை இல்லாததை நினைத்து வருந்தினர்.

பிறகு 15 வருடம் கழித்து அவர்கள் இருவருக்கும் தமிழரசன் என ஒரு மகன் பிறந்தான். அவர்கள் இருவரும் தமிழரசன் மீது மிகுந்த பாசமுடன் இருந்தனர். தமிழரசனுக்கு கலெக்டர் ஆக வேண்டும் என்று விருப்பம். அவன் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்தவுடன் மேற்படிப்பிற்குப் பணம் தேவைப்பட்டது. அதனால் அவனது தந்தை அவர் வைத்திருந்த 2 ஏக்கர் விவசாய நிலத்தை குத்தகைக்கு செட்டியாருக்கு விட்டார்.

செட்டியார் கொடுத்த பணத்தை வைத்து தமிழரசன் மேற்படிப்பை கல்லூரியில் தொடங்கினான். அந்த நேரத்தில் அவனது குடும்பம் விவசாயமும் செய்ய இயலாமல் மிக ஏழ்மையாக வாழ்ந்து வந்தனர். மாணிக்கமும், சிவகாமியும் கூலி வேலைக்குச் சென்று குடும்பம் நடத்தி வந்தனர். தமிழரசன் கல்லூரிப் படிப்பை முடித்து விட்டான். பிறகு மூன்று வருடம் கழித்து மாணிக்கம், செட்டியாரிடம் விட்டிருந்த குத்தகை நிலத்தைத் திரும்பக் கேட்டார்.

செட்டியார், மாணிக்கத்திற்கு கொடுத்த பணத்தை விட மிக அதிகமாகக் கேட்டு அவரை ஏமாற்ற நினைத்தார். மாணிக்கத்திடம் அதற்கு மேல் பணமும் இல்லை. சொந்த பந்தம் யாரும் அவருக்கு உதவ முன் வரவில்லை. பிறகு அவரது மனைவி சிவகாமி வைத்து இருந்த கம்மலை விற்று அவருக்குப் பணம் கொடுத்து உதவினாள். மாணிக்கம் வைத்திருந்த பணத்தோடு சிவகாமி கொடுத்த பணமும் சேர்த்து மொத்த பணத்தையும் செட்டியாரிடம் கொடுத்து விவசாய நிலத்தை திரும்ப மீட்டுக் கொண்டார் மாணிக்கம்.

மாணிக்கத்திற்கும் தன் மகன் கலெக்டர் ஆக வேண்டும் என்றுதான் விருப்பம். சொந்தபந்தம் மற்றும் தன்னை ஏமாற்றிய செட்டியார், இவர்கள் எல்லோர் முகத்திலும் கரியைப் பூசும்படி நீ

கண்டிப்பாக கலெக்டர் ஆக வேண்டும் என்று தன் மகனிடம் தன்னம்பிக்கையை ஊட்டி வளர்த்தார் மாணிக்கம்.

மாணிக்கம் தன் மகனின் கலெக்டர் படிப்பிற்காக தனது 2 ஏக்கர் நிலத்தில் பயிரிட ஆரம்பித்தார். தொடர்ந்து நான்கு வருடங்களாகப் பருத்தியைப் பயிரிட்டார். முதல் வருடம் விளைச்சல் கொஞ்சம் நன்றாக இருந்தது. போகப்போக விளைச்சல் நன்றாக வரவில்லை. காரணம் என்னவென்று அவருக்கும் புரியவில்லை. நாம் வளர்வது பிடிக்காது வேறு யாராவது செய்யும் சூழ்ச்சியா என பல கோணங்களில் யோசித்தார்.

அப்போதுதான், அவர் மகன் தமிழரசன், அப்பா! விளைச்சல் நிலத்தில் வருடாவருடம் ஒரே பயிரை பயிரிட்டால் விளைச்சல் நன்றாக வராது. ஒவ்வொரு வருடமும் வெவ்வேறு பயிரைப் பயிரிட வேண்டும். அப்போதுதான் விளைச்சல் நன்றாக வரும் என்று தமிழரசன் கூறினான். இதை அவன் முன் பாடபுத்தகத்தில் படித்துத் தெரிந்து கொண்டு அவருக்கு அறிவுரை வழங்கினான். மாணிக்கமும் தன் மகன் தமிழரசன் கூறுவது சரி என்று நினைக்க ஆரம்பித்தான்.

தமிழரசன் கூறியது போல் வருடத்திற்கு சோளம், கம்பு, கேழ்வரகு, பருத்தி, கடலைக்காய் என மாற்றி மாற்றி பயிரிட்டார். விளைச்சலும் நன்றாக வந்தது. அதனால் தன் மகனைக் கலெக்டருக்குப் படிக்க வைத்தார். தமிழரசன் கலெக்டராகவும் ஆகி விட்டான். தங்களுக்கு உதவாத சொந்தபந்தம் மற்றும் தன்னை ஏமாற்றியவர்களுக்கு முன்னால் நன்றாகத் தன் மகனைப் படிக்க வைத்து விட்டேன் என்று மகிழ்ச்சி அடைந்தார்.

மாணிக்கம் அவர் வறுமையில் இருந்த போதும் அவரது விவசாயம் ஒன்று மட்டுமே அவருக்கு கை கொடுத்தது. அந்த விவசாயம்தான் அவரது குடும்ப வாழ்க்கை முன்னேறவும்

வழிவகுத்தது. அதனால் யாரும் விவசாயத்தை தரக்குறைவாக எண்ண வேண்டாம்.

அ.கண்ணன்
முதலாமாண்டு, இளம்அறிவியல் வேதியியல்

## விடுகதை

1. ஒரு முழக்கயிற்றுக்கு ஒராயிரம் வாழ்த்துக்கள் . அது என்ன ?
   விடை : தாலி
2. தட்டத்தட்ட, காயக்காய விறகு அது என்ன?
   விடை : சாணம்
3. கிடக்கலாம், அடிக்கலாம் அது என்ன ?
   விடை : காப்பி
4. உரையாத நீர் எது ?
   விடை : வெந்நீர்
5. உடம்பெல்லாம் சிவப்பு, அதன் குடுமி பச்சை அது என்ன ?
   விடை : தக்காளி
6. ஓட்டுத் திண்ணையில் பட்டுப் பாவாடை அது என்ன ?
   விடை : தோடு
7. பையில் இது இருந்தால் வேறு எதுவும் இருக்காது. அது என்ன?
   விடை : கிழிசல்
8. போனால் திரும்பி வராது. அது என்ன?
   விடை : உயிர்
9. மரம் வழுக்கும், காய் துவர்க்கும், பழம் இனிக்கும் அது என்ன ?
   விடை : வாழை
10. காட்டில் இருப்பவன், வீட்டில் மணப்பான் அது என்ன ?

விடை : சந்தன மரம்

11. காலில்லாத பந்தலைப் பார்க்க பார்க்க விநோதம் அது என்ன ?

விடை : ஆகாயம்

12. அடிப்பார் பிடிக்க மாட்டார் அது என்ன ?

விடை : பாம்பு

13. தன்னை அழித்தவரைத் தானே அழிந்திடுவான் அவன் யார் ?

விடை : நஞ்சு

15. சின்னப் பொடியனுக்கு அரண்மனையில் வேலை. அது என்ன ?

விடை : படி

16. தேர் அசைய பூ உதிர அது என்ன ?

விடை : திரிகை

மா. மோனிகாஸ்ரீ

இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## பொது அறிவு

1. சுப்பிரமணிய பாரதியார் பிறந்த ஊர் எது?

விடை : எட்டயபுரம்

2. பொக்காரோ இரும்பு எஃகு தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?

விடை : ஜார்கண்டு

3. 2006 ஆம் ஆண்டு உலக கால்பந்து போட்டி நடைபெற்ற இடம் எது?

விடை : ஜெர்மனி

4. மனித இதயத்தில் எத்தனை அறைகள் உள்ளன?

விடை : நான்கு

5. சமூக அறிவியல், உயிரியல் மற்றும் விலங்கியல் தந்தை யார்?

விடை : அரிஸ்டாட்டில்

6. வகைப்பாட்டின் தந்தை யார்?

விடை : லின்னேயஸ்

7. மருத்துவ இயலின் தந்தை யார்?

விடை : ஹிப்போகிராட்டிஸ்

8. இரத்த ஓட்டத்தின் தந்தை யார்?

விடை : வில்லியம் ஹர்வி

9. அதிகமுறை உலக கோப்பை வென்ற நாடு எது?

விடை : (ஐந்து முறை) ஆஸ்திரேலியா

10. தற்போதைய இந்திய அணியின் கேப்டன் யார்?

விடை : விராட் கோலி

ரா.பிரசன்னா

இளம் அறிவியல் கணிதம் முதலாமாண்டு "ஆ" பிரிவு

## பொது அறிவு

1. ரோஸாரியம் என்றால் என்ன?

   விடை : ரோஜாத் தோட்டம்

2. டியுடெசெனோபியர் என்றால் என்ன?

   விடை : பச்சை நிறக்குருடு

3. டைப்லோயியர் என்றால் என்ன?

   விடை : ஒரு பொருள் இரண்டாகத் தெரியும் குறைபாடு

4. யானைகள் அனாதை நிலையம் எங்கு உள்ளது?

   விடை : இலங்கை

5. விலங்குகளில் அதிக ஆண்டு உயிர்வாழ்வது எது?

   விடை : ஆமை

6. விலாங்கு மீனின் விலங்கியற்பெயர் எது?

விடை : அங்குயிலா பைகலா

7. மிருகங்களில் குறைந்த நேரம் தூங்குவது எது?

விடை : ஒட்டகச்சிவிங்கி

8. மிருகங்களில் குரல் எழுப்ப முடியாதது எது?

விடை : கழுதை

9. நீர்யானை எவ்வகையைச் சார்ந்தது?

விடை : பன்றிவகை

10. மிருகங்களில் வேகமாக ஓடுவது எது?

விடை : சிறுத்தை

ம.குணசேகர்

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## பொது அறிவு

1. ஒட்டகச்சிவிங்கி பிறக்கும்போது எவ்வளவு உயரம் இருக்கும்?

விடை : ஆறு அடி

2. சுதந்திரதேவி சிலையின் உயரம் எவ்வளவு?

விடை : 150 அடி

3. முதன் முதலில் எழுத்தைப் பயன்படுத்தியவர்கள் யார்?

விடை : சுமேரியர்கள்

4. கண்ணீர்சுவர் என அழைக்கப்படுவது எது?

விடை : சீனப்பெருஞ்சுவர்

5. வர்த்தக ஒலிபரப்பைத் துவக்கிய முதல் நாடு எது?

விடை : அமெரிக்கா

6. தரையில் வாழும் ஆமைகளின் பெயர் என்ன?

விடை : டார்டாய்ஸ்

7. செவாலியர் விருதை உருவாக்கியவர் யார்?

விடை : நெப்போலியன் போனபார்ட்

8. தேயிலையில் உள்ள வைட்டமின் எது?

விடை : வைட்டமின் ஏ

9. உலக மக்களில் வேகமாக ஓடுபவர்கள் யார்?

விடை : நீக்ரோக்கள்

10. ஆமை தரையில் நடக்கும் வேகம் எவ்வளவு?

விடை : சுமார் 70 மீட்டர்கள்

மு.உமாராணி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## புல்வாமாவில் பூத்த ரோஜா

புல்வாமாவில் பூத்த ரோஜா
அரை அடி பனி
உன் காலடி
தடுக்கும் என்று
தாமதமாய் போனாய்
ஒரே ஒரு அடி
உன்னை சாய்க்கும் என்று
நீ நினைக்க வில்லையே!
எதிரிகளை புறமுதுகிட்டு
ஓடச் செய்பவன் நீ
உடன் இருப்பவனே
முதுகில் குத்துவான் என்று
நினைக்கவில்லையே நீ!
காதலர்களின் ரோஜாக்கள்
மலரும் முன் உன் கல்லறையில்

வாடிக் கொண்டிருக்கின்றன.
மலர் மணம் வீசும் முன்
மண் எங்கும்
உன் இரத்த மணம்
பொறுத்தேன் உன்னை
மறுஅடி அடிக்க
வாய்ப்பு கொடுத்ததற்காக...
சிதறிய உடல்களைத் தேடி
சிதறிய சந்தோஷங்கள்...
நிலவுடன் உன் புகழும் ஒளிரட்டும்
நல்லதொரு இந்திய தேசம் மலரட்டும்..
"ஜெய் ஹிந்த்"

க. ஹரிகிருஷ்ணன்
இளம் அறிவியல் வேதியியல் இரண்டாமாண்டு

